


திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, புதுபாளையம் கிராமம் ஆரணியாற்றின் குறுக்கே ரூபாய் 20 கோடியில் கட்டப்பட்ட வரும் மேம்பாலத்தை முன்னாள் மாவட்ட செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினர், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ. கோவிந்தராஜன் ஆய்வு செய்தார். உடன் பி.முத்து, முனுசாமி, சினிவாசன், அப்புன், வெங்கடேசன் பாபு, கோதண்டன், அந்தோணி, சுப்பிரமணி, கோவிந்தன், ராஜேந்திரன், ஜெயகுமார். ரவி, ஹேமசங்கிலி வெங்கடேசன், மோகன்ராஜ், கோபி, சூரியபிரகாஷ் ஆகியோர் உடன் இருந்தனர்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றிய திமுக.இளைஞர் அணி ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் 102 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் திராவிட மாடல அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு நல திட்டங்கள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக்கழக பேச்சாளர்கள் குமரி பிரபாகரன், தே.சிலம்பரசன், மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ப.அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், ஒன்றிய செயலாளர் பி.சேகர், பேரூர் செயலாளர் என். பாண்டியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், அ.யுவராஜ் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.சஞ்சய் காந்தி ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.குமரன், துணை அமைப்பாளர்கள் எஸ்.எஸ்.கே.சத்யா, லோ.ரமேஷ். தியாகராஜன், கார்த்திக் குமார், ராஜ் பிரகாஷ் மற்றும் ஒன்றியகழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் கோவிந்தன்
### ஜூலை 2 (1991)



1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.

1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு "அண்ணா விருது" வழங்கி சிறப்பித்தார்.

"கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## ஒன்றிய அரசின் வஞ்சகத்தை எடுத்துரைப்போம்!
# 'ஓரணியில் தமிழ்நாடு' திட்டத்தில் மக்களை ஒன்றிணைப்போம்!
### திருச்சியில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேட்டி!



திருச்சி ஜூலை 2 -

ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் மக்களை ஒன்றிணைப்போம் எனவும், திமுக அரசின் சாதனைகளும் ஒன்றிய அரசின் வஞ்சகத்தையும் இளம் தலைமுறை வாக்காளர்களுக்கு அவர்களுக்கு புரியும்படி பக்குவமாக எடுத்துக் கூறுவோம் என திருச்சியில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் பேசியதாவது:-

திருச்சி தெற்கு மாவட்ட திமுகவில் திருவெறும்பூர் மணப்பாறை திருச்சி கிழக்கு ஆகிய மூன்று தொகுதிகள் உள்ளன.

அந்த மூன்று தொகுதிகளிலும் 871 வாக்குச்சாவடிகள் உள்ளன. அந்த வாக்குச் சாவடிகள் நேரடியாக சென்று மக்களிடம் திமுக அரசின் திட்டங்கள் எடுத்து கூறுவது, ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு செய்து வரும் வஞ்சகங்களை எடுத்து கூறுவது அதன் மூலம் ஓரணியில் தமிழ்நாடு என்கிற இந்த திட்டத்தில் மக்களை இணைப்பது மேற்கொள்ள உள்ளோம். மண் மொழி மானம் காக்க தான் ஓரணியில் தமிழ்நாடு என்பது செயல்படுத்தப்பட உள்ளது. ஒன்றிய அரசின் மூலமாக வஞ்சிக்கப்படுகிறோம் என மக்களிடம் எடுத்து கூறுவோம்.

தமிழ்நாட்டிற்கு வர வேண்டிய கல்வி நிதி வழங்கப்படவில்லை, RTE நிதி வழங்கப்படாமல் உள்ளது. இது போன்றவற்றை மக்களிடம் எடுத்து கூறுவோம். எதிர்கட்சி யினர் வீடுகளாக இருந்தாலும் அவர்கள் வீட்டிற்கு சென்று அவர்களையும் சந்திப்போம். வாக்குச் சாவடியில் எவ்வளவு பேர் இருந்தாலும் அனைவரின் வீட்டிற்கும் செல்லவிருக்கிறோம்.

ஓரணியில் தமிழர்களாக இணைப்பது தான் முதல் இலக்கு, இரண்டாவது தான் விருப்பபட்டவர்களை கட்சியில் சேர்ப்பது. 18 முதல் 25 வயதுள்ள இளைஞர்களை சந்தித்து அவர்களுக்கு புரியும்படி பக்குவமாக திமுக அரசின் சாதனைகளை எடுத்து கூறுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

செய்தியாளர்கள் சந்திப்பின்போது மாநகர கழக செயலாளர் மதிவாணன், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவிந்தராஜ், செங்குட்டுவன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ராஜேந்திரன், ராமசாமி, நகரக் கழகச் செயலாளர் காயாம்பு உடன் இருந்தார்கள்.

## சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்
# "ஓரணியில் தமிழ்நாடு" விளக்க பொதுக்கூட்டம்!
### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!

| | |
|---|---|
| தலைமை : | நே.சிற்றரசு, சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் |
| வரவேற்புரை: | ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் |
| முன்னிலை: | மாவட்ட நிர்வாகிகள் |
| சிறப்புரை : | கா.அமுதரசன், மாநில துணை செயலாளர், மாணவர் அணி அத்திப்பட்டு சாம்ராஜ், தலைமைக்கழக பேச்சாளர் |



சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் "ஓரணியில் தமிழ்நாடு" விளக்க பொதுக்கூட்டம் ஆயிரம்விளக்கு, மெலோனி சாலையில் இன்று (2.7.2025 - புதன் கிழமை) மாலை 6.00 மணி அளவில் நடைபெறுகிறது. இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமை ஏற்கிறேன். ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர். சென்னை மேற்கு மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர். இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி துணை செயலாளர் கா.அமுதரசன், தலைமைக்கழக பேச்சாளர் அத்திப்பட்டு சாம்ராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள். மேலும் கழக அமைப்பு இணைச் செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உரையாற்றுகின்றனர். இந்நிகழ்வில் பகுதிக் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக்கழக செயலாளர்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். கூட்ட முடிவில் 117வது வட்ட கழக செயலாளர் எஸ்.சத்தியபெருமாள், 117அ வட்டக் கழக செயலாளர் எல்.தவமணி, 117வது மாமன்ற உறுப்பினர் திருமலை பொன்னுரங்கம் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் முதலமைச்சர் ஆணைப்படி
# ஓரணியில் தமிழ்நாடு இயக்கம் மூலம் 30 சதவீதம் உறுப்பினரை சேர்க்க வேண்டும்!
### புழல் எம். நாராயணன் முன்னிலையில் தீர்மானம்!

மாதவரம், ஜூலை 2-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில் முப்பது சதவீத உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக கழக செயல்வீரர்கள் கூட்டம் 19வது வட்டம் மாத்தூர் இரண்டாவது பிரதான சாலையில் அமைந்துள்ள ராகவேந்திரா திருமண மண்டபத்தில் பகுதி அவைத்தலைவர் வி. திராவிடவீரன் தலைமையில் நடைபெற்றது.

19 ஆவது வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்புரையாற்றினார். வட்டக் கழக வட்டக் கழக செயலாளர் பதினைந்தாவது வட்டம் கே. அங்குசாமி, 16 வது வட்டம் இ. கண்ணப்பன், 17வது வட்டம் கே. கருணாகரன், 23வது வட்டம் பி. எஸ். சந்துரு, 23 அ வட்டம் வி.ஆர். குப்பன் பகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன்,பி. நிர்மல் குமார், வழக்கறிஞர் வி .கார்த்திகேயன், கே. செல்வன், ஜிம் கே. ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, திராவிட மாடல் அரசு செயல்படுத்தி உள்ள திட்டங்களை வீடு வீடாக சென்று பொது மக்களிடம் எடுத்துக் கூறி, அதே சமயம் அவர்களுக்கு அரசு செய்ய வேண்டிய எஞ்சிய பணிகளை கேட்டு அறிந்து அதற்கான தீர்வை காண்பது என முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி முப்பது சதவீத வாக்குகளை மாதவரம் வடக்கு பகுதி முழுவதும் சேர்த்து கழகத்தை வலுப்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு வருகின்ற எட்டாம் தேதி மணலி புதுநகர் 16வது வட்டத்தில் நடைபெறுகின்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிப்பது என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.


இக்கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு,மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு துணை அமைப்பாளர் கே. ஏழுமலை, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். உதயகுமார், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அம்மு மூர்த்தி, மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச். பீர்முகமது, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் எம் .அமுதா, எஸ். கலைச்செல்வி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முகப்பிரியன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ். கோபாலகிருஷ்ணன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி. துரைசாமி, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் கே. சேரலாதன், மாவட்ட இலக்கிய அணி துரைதசரதன், மாவட்ட துணை அமைப்பாளர் பேன்சி பா. ரமேஷ்,

மாதவரம் வடக்கு பகுதி மகளிர் அணி அமைப்பாளர் சுகாசினி, துணை அமைப்பாளர்கள் சரஸ்வதி, பெரிய நாயகி, கஸ்தூரி, அத்திகுளம் தேவி, மணலி புதுநகர் சாந்தி, வயலட் ராணி

மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ர. விஜய் ஆனந்த் துணை அமைப்பாளர்கள் எம். என் .அஜய் தென்னவன், எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், ஜி. ராஜேஷ் கண்ணன், டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் வினோத் குமார் ஐ சி எப் கே .விஜயகுமார், புஷ்பராஜ், வழக்கறிஞர் பர்மா நகர் சுரேந்தர் உள்ளிட்ட மாவட்ட பகுதி, வட்டக் கழக, கிளைக் கழக நிர்வாகிகள், பலர் கலந்து கொண்டார்கள்.




பூண்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் நான்கு கூடுதல் வகுப்பறை கட்டடத்தை டி.ஆர். ஆக்சியன் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்கிற தனியார் நிறுவனத்தின் பங்களிப்புடன் 82 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு அதனை திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் மாணவ – மாணவியர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தனியார் நிறுவன அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர் உள்ளிட்ட ஆசிரிய பெருமக்கள், ஒன்றிய செயலாளர் தா. கிறிஸ்டி என்கிற அன்பரசு, நிர்வாகிகள் ப.சிட்டி பாபு, தா. மோதிலால், சித்ரா ரமேஷ், லட்சுமணன், எம். எஸ். அருண்குமார், வி. எஸ். சதீஷ், எம். எம். லிங்கேஷ்குமார், ராஜாசிங் உள்ளிட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக கழக செயல்வீரர்கள் கூட்டம் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் 19வது வட்டம் மாத்தூர் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் பகுதி அவை தலைவர் வி. திராவிடவீரன் தலைமையில் நடைபெற்றது . தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் ஆணைப்படி ஓரணியில் தமிழ்நாடு எனும் தலைப்பில் 30 சதவீதம் உறுப்பினர்களை பகுதி முழுவதும் சேர்க்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வட்டச் செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன் வரவேற்றார், வட்ட செயலாளர்கள் கே.அங்குசாமி, இ.கண்ணப்பன்,கே. கருணாகரன், பி.எஸ். சந்துரு, வி. ஆர். குப்பன், பகுதி நிர்வாகிகள் கே. சிவசங்கரன், ஆ. ராஜேந்திரன், நா. மோகன் குமார் நாகூர், பா. சந்திரன், பி. நிர்மல் குமார், கே. செல்வன், வக்கீல் வி. கார்த்திகேயன், ஜிம் கே. ராஜா உள்ளிட்ட அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் என 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் க.இராசவேலு
### ஜூலை 2 (2013)



நீதிக்கட்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பின்னர் கழகம் துவங்கப்பட்ட போதே, கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கியவர்.

திருவரங்கம் பகுதியில் கழகம் வளர பாடுபட்ட மூத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

மதி எனும் இதழை நடத்தியும், நாடகங்கள் எழுதி அதில் நடித்தும், 'செண்பகத் தமிழ் அரங்கு' எனும் தமிழ் அமைப்பினை தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழிலக்கியக் கூட்டங்கள் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றி அந்நகர வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2010ல் தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு வழங்கும் விழாவில் 'அகவை முதிர்ந்த தமிழறிஞர்' எனும் விருதினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**